ஜனாதிபதித் தேர்தல் 2010

பொதுச் சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்வதனைக் கண்காணித்தல்:

2010 ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் தகாத உபயோகம் மூலம் வரி செலுத்துவோரின் பணம் விணாக்கப்படுவதனைக் குறைக்கும் முயற்சியாக பொதுச் சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்வதனைக் கண்காணிப்பதுதாக ட்.இ.ஆர்.ல, பொது வளங்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டம் (பொ.வ.பா.நி.தி) (PPPR) ஒன்றை ஏற்படுத்தியது.

பொ.வ.பா.நி.தி இன் கீழ், அரசாங்க வாகனங்கள் ஹெலிகொப்டர்கள் மற்றும் ஏனைய போக்குவரத்துச் சாதனங்களை உபயோகித்தல், அரச கட்டடங்கள் மற்றும் ஏனைய சேவைகள் அல்லது அரச வங்கிகளினால் விசேட கடன் வசதிகள் வழங்குவதன் மூலம் பொது வளங்களைத் துஷ்பிரயோகம் செய்யும் சந்தேப்பங்கள் பற்றி அறிவிக்குமாறு ட்.இ.ஆர்.ல, பொது மக்களுக்கு அழைப்பு விடுத்தது. அரச அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைத் துஷ்பிரயோகம் செய்வது பற்றியும் அறிவிக்க முடியுமாக இருந்தது. பொது மக்களின் பிரதிபலிப்பு அபரிமிதமாக இருந்தது. பல துறைகளையும் சார்ந்த மக்கள் பல்வேறுவிதமான தகவல்களை ஒவ்வொரு நாளும் வழங்கினர். அவற்றுள் உண்மையான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் மாத்திரம் பத்திரிகை வெளியீடு மற்றும் அறிக்கைகளாக அவ்வப்பொழுது மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

அரச சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்தல்

தேர்தல் பிரச்சாரக் காலப்பகுதியில் பொது வளங்களைத் துஷ்பிரயோகம் செய்தமை பற்றி பெரும் எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

ஜனாதிபதியின் ஆறு கட்டங்களுக்காக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 1,000 இற்கும் மேற்பட்ட பஸ்களை உபயோகித்தமை பற்றி பொ.வ.பா.நி. திட்டம் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை வைத்திருக்கின்றது. இது இ.போ.ச இற்குச் சொந்தமான 9,149 பஸ்களுள் 1/9 பகுதியை துஷ்பிரயோகம் செய்தமையாகும். கட்சி ஆதரவாளர்களை அழைத்துச் செல்வதற்கென இ.போ.ச பஸ்களை உபயோகிப்பதானது, அரச சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு எதிரான தேர்தல்கள் ஆணையாளரின் கட்டளை இல. 4 இனை மீறுவதாகும்.

அரசியல் காரணங்களுக்காக அரச நிறுவனங்கள் உபயோகப்படுத்தப்படுவது மற்றும் அரசாங்க அதிகாரிகள் அவர்களது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தமை பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொ.வ.பா.நி. திட்ட அறிக்கை ட்.இ.ஆர்.ல இணையத் தளத்தில் பெறலாம் *www.tisrilanka.org*

ஊழல இல்லாது ஒழிப்பதற்கான வாக்குறுதிக்குப் புகழாரம்

இலங்கையிலிருந்து மோசடி மற்றும் ஊழல ஒழிப்பதற்காக வாக்குறுதி அளித்தமைமிட்டு ட்.இ.ஆர்.ல இரு பிரதான ஜனாதிபதி அபேட்சகர்களான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களையும் ஜெனரல் சரத் பொன்சேகா அவர்களையும் பாராட்டியது. அவர்களுடைய அரசியல் விஞ்ஞாபனத்தில் இருவரும் இதன் தேவையை அறிந்து அதற்கு முன்னுரிமை அளித்து அங்கீகரித்திருந்தனர்.

நாட்டில் ஊழலுக்கு எதிராகப் போரிடுவதற்கும் நேர்மைத் திறனை விருத்தி செய்வதற்குமான ஆழ்ந்த முயற்சி மற்றும் வாக்குறுதிகளுக்கு அதன் ஒத்துழைப்பை வழங்க உறுதியளித்ததோடு தேர்தல் பிரச்சாரத்தின் போது நல்லாட்சிக்காக வழங்கப்படும் வாக்குறுதிகள் தேர்தல் வெற்றியின் பின்னர் அவை பெரும்பாலும் ஆமுமாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என ட்.இ.ஆர்.ல எச்சரித்துள்ளது.

முன்னொரு போதுமில்லாதவாறான விளம்பரச் செலவு

2010 ஜனாதிபதித் தேர்தலில் விளம்பரப் பிரசாரச் செலவீனம் என்றுமில்லாத அளவில் அதிகரித்தது தேர்தல் பிரசாரத்தின் இறுதிக்கட்டத்தில் செலவீனம் அபரிமிதமான முறையில் மிதமிஞ்சிய அளவிற்கு அதிகரித்தது.

2009 டிசம்பர் 31 முதல் 2010 ஜனவரி 15 வரை ஜெனரல் பொன்சேகாவின் பிரசாரச் செலவீனம் ரூபா 7,054,000 இலிருந்து அண்ணளவாக ரூபா 80 மில்லியனாக அதிகரித்ததோடு ஜ.ம.சு.மு இனதும் 'தாருண்யட் ஹெட்க்' எனும் பிரசாரமும் சேர்ந்து ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கு ஆதரவான செலவீனம் ரூபா 200 மில்லியனிலிருந்து ரூபா 378 மில்லியன் வரையும் இடுதகாலப் பகுதியில் அதிகரித்தது. இந்தச் செலவீனங்களுக்கு தயாரிப்புச் செலவீனம் தவிர்ந்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் விளம்பரங்களைப் பிரசுரிக்கவும், வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் ஒலி, ஒளி பரப்பும்குமான செலவீனமாகும். பிரச்சார வேலைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட விளம்பரங்களின் உயர் தரத்தைக் கருத்திற் கொள்ளும் போது பிரசார வேலைகளின் உண்மையான செலவீனம் மேற் குறிப்பிட்ட பெறுமதியிலும் மிகவும் அதிகமாகவே காணப்படும்.

2009 இல் ஆட்சிப் பிரச்சினை

ஐ.நா ஊழல் எதிர்ப்பு தினத்தன்று வெளியிடப்பட்ட ட்.இ.ஆர்.ல வின் 2009 நல்லாட்சி அறிக்கை, பங்குகொள்ளல், வெளிப்படைத் தன்மை, வகை கூறுதல், பால்நிலைப் பாகுபாடு மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆகிய ஏனைய பல தலைப்புகளிடையே உள்ள பிரச்சினைகளை ஆராய முயல்கின்றது.

இந்த அறிக்கையில் கோப், மத்திய வங்கி ஆகியவற்றின் அத்தியாயங்கள் உட்படுத்தப் பட்டுள்ளதோடு அவற்றின் வகைகூறும் பொறுப்பு நியுணர்களுக்கும், வரப்பிரசாதம் பெற்றவர்களுக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்படக்கூடாது எனும் வகையில் பொதுவாக அழுத்திக் கூறப்பட்டுள்ளது. ஏனெனில் அப்பழுப்பட்டவர்களுக்கு பொறுப்புவாய்ந்த மற்றும் தீர்க்கமான, அரச நிறுவனங்களிலிருந்து தகவல்களைக் கோரிப்பெற்றுக் கொள்ள முடியும். இதற்குப் பகரமாக வகைகூறும் பொறுப்பு சமூகத்தின் சகல துறையினருக்கும் முன் ஏற்பாட்டுடன் வெளிப்படைத் தன்மையுடையதாக இருக்க வேண்டும். அரசாங்கத்தின் நோக்கம் எதுவாயினும், கருத்துட்டங்கள் மீதான ஆக்கபூர்வமான பங்குகொள்ளல் மற்றும் உரிமைகொள்ளல் மூலமே சட்டபூர்வ உரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதே வடக்கு மற்றும் கிழக்கு முரண்பாட்டின் பின்பான ஆட்சியை ஆராயக்கின்றபோது தெளிவாகின்ற கருத்தாகும். இக்கருத்திட்டங்களின் தீர்மானமெடுத்தல் மற்றும் அமுக்கமுயான மீளாய்வுகளின்போது ஆழ்ந்த உள்ளீடுகளை உட்படுத்தவேண்டும்.

தகவல் உரித்துரிமைச் சட்டம் ஒன்று இல்லாதகாலத்தை இவ்வறிக்கை மீண்டும் மேற்கோள் காட்டுவதோடு ஒரு குறுகிய ஆட்சித் தோற்றத்திலிருந்து பார்க்கும்போதுகூட இது பலவீனப் படுத்துவதாகவும், ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றுமாகும். அரசாங்கத்தின் மனித உரிமைகள் மற்றும் ஊடக சுதந்திரம் பற்றிய சாதனைகளில் இது எங்குமில்லாதவாறு தெளிவாய்க் கண்டறியப்படுகின்றது.

நிதிச் சேவைத்துறை, ஆட்சிச் சுட்டி பற்றிய இலங்கைக் தோற்றம், ஊடக சுதந்திரம், வீழ்ச்சியின் மீதி யுகம் போன்ற ஆட்சியின் ஆபத்தான நிலைகள் இவ்வறிக்கையில் கையாளப்பட்டுள்ளவைகளாகும்.

இலஞ்ச ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் அமிர் இஸ்மாயில் உடனான நேர்காணலில் ஆணைக்குழுவின் இற்றைவரையிலான வேலைகள் பற்றி சுருக்கமாகத் தொகுத்துக் கூறியுள்ளார்.

பொது நிர்வாக உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி. திராநாயக்க, அரசாங்க சேவையில் ஊழலைக் குறைக்க முயலும் "க்ளீன் ஹேண்ட் மூவ்மண்ட்" எனும் அரசாங்க சேவை இயக்கம் பற்றி ஆராய்கிறார்.

ஆட்சி அறிக்கையின் பிரதிகளை No. 28/1, TISL Office, Bullers Lane, Colombo - 07 இல் பெற்றுக்கொள்ளலாம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பின் நேர்மைத்திறன் பரீட்சிக்கப்பட்டது

டிசம்பர் 18ம் திகதியில் வந்த ஸ்ரவதேச புலம்பெயர் தினத்தைபொட்டி ட்.இ.ஆர்.ல வினால் "வெளிநாட்டு வேலைவாய்ப்பின் நேர்மைத் திறன்" என்ற அறிக்கை வெளியிடப்பட்டது. இது மகளிர் ஆராய்ச்சி நிலையத்திற்கு (CENWOR), 2008 இன் பிற்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கென ஆட்சேர்ப்பில் இடம்பெற்ற ஊழல்கள் பற்றி ட்.இ.ஆர்.ல வினால் மேற்கொள்ளப்பட்ட கற்கைகளின் அடிப்படையாகக் கொண்டதாகும். வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைத் தேடும்போது குடிபெயர்ந்து செல்லும் தொழிலாளர்கள் முகம் கொடுக்க நேரிடும் ஊழல்கள் மற்றும் அவர்களைப் பாதுகாக்கவென அமைக்கப்பட்டுள்ள முகவர் நிலையங்கள், நிறுவனங்களின் ஆட்சியமைப்பு முறைகளிலிருந்து எழக்கூடிய அபாயங்கள் பற்றியும் இந்த கற்கை குறிப்பிடுகின்றது.

இலங்கையின் பொருளாதாரத்தின் ஓர் பிரதான உண்மை யாதெனில் வெளிநாட்டு வேலைவாய்ப்பானது இரண்டாவது பிரதான அந்நியச் செலாவணியை நாட்டுக்குப் பெற்றுத்தருவதாகும். 2008 இல் குடிபெயர்ந்த தொழிலாளர்கள் மூலம் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு செலாவணி 2.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இலங்கையில் தொழிலாளர் எண்ணிக்கையில் (அண்ணளவாக 8 மில்லியன்) நாங்கில் ஒரு பங்கினர் வெளிநாடுகளில் வேலை செய்கின்றனர்.

தொழில் தேடுவோர் மற்றும் உத்தரவு பெற்ற தொழில் முகவர்களுக்குமிடையே இணைப்பாளர்களாக இலங்கையில் இயங்கும் உப முகவர்களுக்கென ஒழுங்கமைப்பு விதிகளோதும் இல்லாமை இம் முக்கிய துறையான வெளிநாட்டு வேலைவாய்ப்பு சம்பந்தப்பட்ட தற்போதைய சட்ட விதிகளில் காணப்படும் குறைபாடு என இந்த ஆய்வு கருத்து வெளியிட்டுள்ளது. ஓர் உதவி முகவர் பல முகவர்கள் சார்பாக வேலை செய்வதோடு தன்னால் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு நபருக்குக் கமிசன் பெற்றுக்கொள்வதோடு மட்டுமல்லாமல் தொழில் எதிர்பார்பேரிடமிருந்தும் மேலதிகமான ஒரு தொகையையும் அவர்கள் அறவிடுவதாக இந்த ஆய்வு தெளிவுபடுத்துகின்றது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் (இ.வெ.வே.ப) அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட 626 முகவர்களுக்கு மேலதிகமாக பதியப்படாத சுமார் 400 ஆட்சேர்ப்பு நிலையங்கள் இலங்கையில் இயங்குகின்றன. அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தல் நடைமுறையுடை குறைபாடு உடையதாகக் காணப்படுகின்றது. மேலும் பதிவு செய்யப்பட்ட சுமார் 25% அளவிலான முகவர் நிலையங்கள் இயங்குவதில்லை.

இ.வெ.வே. பணியக பணிப்பாளர் சபையில் ஆட்சேர்ப்பு முகவர் நிலைய உறுப்பினர்களும் இருப்பதனால் ஆர்வ முரண்பாடு காரணமாக பணியகத்தின் நற்பயங்கள் தடைப்படுகின்றதனை ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

புலம்பெயர் வேலையாட்கள் சட்டபூர்வமற்ற கட்டணம் செலுத்தவேண்டிய ஏற்படுவதாகவும் இக்கொடுப்பனவு ரூபா. 1.3 மில்லியன் வரை அதிகரித்துள்ளது. இலங்கையின் உறைபுப்க்கு மிகவும் கிராக்கி இருக்கின்று வேளையிலும் இவ்வாறு கொடுப்பனவுகள் மேற்கொள்ளள வேண்டியுள்ளது. இந்த நிறுவனங்கள் மற்றும் சட்ட அமுலாக்கல் இரண்டுமே பலவீனமாக இருக்கின்ற சூழலில் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் மிக முக்கிய வளமான புலம்பெயர் தொழிலாளர்கள் ஊழல் மற்றும் கரண்டல்களால் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

இந்தப் புலம்பெயர் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அரசாங்க அனுமதி பெற்ற முகவர்கள், உத்தியோபூர்வமற்ற தொடர்வலைப் பின்னல்கள் மற்றும் சட்ட நீதியான - சட்ட நீதியற்ற முகவர்கள் ஆகிய சகல இடைநிலை நிறுவனங்களும் தொழில் தேடுவோரை ஊழல் மீதியில் ஆழ்த்துவதாக இந்த கற்கை கண்டுபிடித்துள்ளது. அரசியல் மற்றும் வெளிப்படைத் தன்மை இல்லாமை அரச ஆட்சேர்ப்பில் ஊழல் பற்றிய பொதுத் தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தொழிலுக்கான அனுமதி பெறமுன் விளம்பரம் கொடுத்தல், வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணங்காணப்பட்ட ஊதியம் பற்றிய செய்தியை இ.வெ.வே. பணியகத்திடமும், தொழிலாளர்களிடமும் இருந்து தமாறித்தல், ஆதனங்களைப் போலியாகத் தயாரித்தல், அதிகாரமற்ற கட்டணங்களை அறவிடுதல், தொழிலாளர்களை தொழில் உடன்படிக்கை கைச்சாத்திடாமல் அனுப்புதல், சென்ற இடத்தில் தொழிலாளர்களைத் தவிக்கவிடல், செல்லவேண்டிய இடங்களை மாற்றுதல் தவறாக செய்யப்பட்ட இடங்களுக்கு ஆட்சேர்த்தல், வீட்டுத் தொழிலாளர்களின் முதல் மூன்று மாதங்களுக்கான ஊதியத்தை வழங்காமை, ஆட்சேர்ப்பிற்கான கட்டணத்தை அறவிட்ட பின் முகவர் நிலயத்தை மூடி விடுதல் மற்றும் தொழிலாளர்களை ஏமாற்றிவிட்டு இடத்தை மாறுதலுட் ஆகியன உத்தரவு பெற்ற முகவர் நிறுவனங்களில் இடம்பெறும் தகாத செயல்களின் பரப்பில் சேர்கின்றது. இவற்றில் ஒரு சில தகாத செயல்கள் வேலைகொள்வோர் அல்லது வெளிநாட்டு முகவர்களுடன் வஞ்சக நோக்கில் இணையும் உள்ளூர் ஆட்சேர்ப்பாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு சில வீட்டுப் பணியாளர்களின் மருத்துவப் பரிசோதனைகள், ஒழுக்க நெறிகளுக்கு மாறாக நடாத்தியதாகவும் சொல்லப்படுகின்றது.

ஏனைய துறைகளைப் போன்றே ஊழலின் பின்னாான விளைவுகளைக் குறைத்து மதிப்பிட முடியாது என்பதனை அறிக்கை முடிவு கண்டுள்ளது. இலங்கையின் உழைப்பு மிகவும் கிராக்கியாகவுள்ள ஓர் வளமாக இருந்தபோதிலும் ஆட்சேர்ப்பின்போது இடம்பெறும் ஊழலினால் பாதிப்படைந்த புலம்பெயர் தொழிலாளர்களாலேயே இந்த ஊழலின் செலவீனச் சுமையைத் தாங்கவேண்டியுள்ளது. ஆட்களை வேலைக்கமர்த்தும் நாடுகளிலுள்ள ஆட்சேர்ப்பவர்களினால் ஏமாற்றப்படும்போது இலங்கையின் ஆட்சேர்ப்பு முகவர்களும் பாதிக்கப்படுகின்றனர். ஊழல் காரணங்களுக்காக பெருமளவு பணம் குறையாடப்பட்டால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பாதிப்படையும்.

ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு ஊழலை மட்டுப்படுத்தவும், குறைக்கவும் பலமான அரசியல் விருப்பும், தலைமைத்துவமும் தேவைப்படுகின்றது. இந்த நீண்ட நாள் முயற்சியின் ஒரு முக்கிய பங்குதாரர் சிவில் சமுகமாகும். அத்தோடு பாதுகாப்பாகப் புலம்பெயர்வுதன் நிச்சயப்படுத்துவதற்காக அரியல் நிறுவனங்கள் சகல பங்குதாரர்களுடனும் சேர்ந்து செயற்படவேண்டுமென அறிக்கை தெரிவிக்கின்றது.

முழு அறிக்கை ட்.இ.ஆர்.ல இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம் www.tisrilanka.org

த.உ.உ கருத்தரங்கில்

அர்ஸந்த கெஜ்ரிவால், இந்தியாவில் தகவல் உரித்துரிமைச் சட்டம் சம்பந்தமான போராட்டம் மற்றும் இந்தியாவில் எவ்வாறு இச்சட்டம் இயங்குகின்றது என்பது பற்றி கலந்துரையாடுவதற்கென ட்.இ.ஆர்.ல வினால் அரச அதிகாரிகளுக்கும், ஊடகவியலாளர்களுக்குமான கொழும்பிலும், பதுளையிலும் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றினார்.

"நேர்மைத்திறனுடனான ஓர் அரசாங்க சேவையை நோக்கி" என்பதே உள்நாட்டு கிரைவர்த் திணைக்களத்தைச் சேர்ந்த ஆணையாளர்கள் மற்றும் உதவி ஆணையாளர்கள் உள்ளடங்லாக 88 உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட கருத்தரங்கு.

அரசாங்க அதிகாரிகளுக்கான கிரண்டாவது கருத்தரங்கு பதுளை பொது நூலகக் கேட்போர் கூடத்தில் கூடம்பெற்றதோடு 400 இற்கும் மேற்பட்ட மாவட்டத்தைச் சேர்ந்த மாகான அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இலங்கைப் பத்திரிகையாளர் பேரவையில் கூடம்பெற்ற ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்றிலும் அவர் உரையாற்றினார்.

நேர்மைத்திறன்

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா - செய்தியறிக்கை

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
Building a Nation of Integrity

வெளியீடு 7 மார்ச் 2010

28/1, Buller's Lane, Colombo 07
Tel: 0112501474 Fax: 0112592287
tisl@tisrilanka.org www.tisrilanka.org

தகவல் உரித்துரிமை

சக்திவாய்ந்த ஒரு கருவி



" தகவல் உரித்துரிமை இந்தியாவில் பொதுமக்கள் வசமுள்ள மிகவும் சக்திவாய்ந்த ஒரு கருவியாகும். சுதந்திரத்திற்குப் பின்பான காலப்பகுதியில் இலஞ்சம், ஊழல் மற்றும் அநீதிக்கு எதிராக சவால்விடுவதற்கு இச்சட்டம் மக்களுக்கு அதிகாரமளித்துள்ளது." என இந்தியாவின் சமூக சேவையாளரான அரவிந்த் கெஜ்ரிவால் பண்டாநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய நேர்மைத்திறன் விருது வழங்கும் வைபவத்தின் போது குறிப்பிட்டார்.

இந்தியாவின் தகவல் உரித்துரிமையின் (RTI) வரலாறு சென்ற வழிமற்றி விளக்கிய அவர் தகவல் உரித்து உரிமை அடிப்படை உரிமைகளின் ஒரு பகுதி என முதன் முதலாக 1976இல் உயர்நீதிமன்றமே சுட்டிக்காட்டியதாகக் கூறினார். ஏனெனில் அரசியலமப்பாப்பின் 19வது சரத்து கருத்துச் சுதந்திரம் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஒருவர் ஒன்றைப் பற்றித் தெரிந்திருக்காவிட்டால் அவருக்கு அது பற்றிப் பேசவோ அல்லது கருத்துக் கூறவோ இயலாது என உயர்நீதிமன்றம் விளக்கியது. மக்கள் வரி செலுத்துகின்றனர். ஒரு சவர்காரக்கட்டியை வாங்கும்போது வதியில் உள்ள ஒரு யாசகர் கூட வரி செலுத்துகின்றான். மக்களே எசமானர்கள். ஆகவே அவர்களது பணம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என அறியும் உரிமை மக்களுக்கு உண்டு. ஜனநாயக நாடொன்றில் மக்களே எசமானர்கள். தமது சேவகர்கள் எவ்வாறு செயற்படுகின்றார்கள் என்பதனை அறியும் உரிமை அந்த எசமானர்களுக்குண்டு." என உயர்நீதிமன்றம் குறிப்பிட்டது.

தகவல் அறிவதற்கான உரிமை மக்களுக்கு உண்டு என உயர்நீதிமன்றம் குறிப்பிட்டதும் அதனை அமுல்படுத்துவதற்கான ஓர் சாதனம் இருக்க வேண்டுமென உணரப்பட்டது அத்தோடு 2005 இல் தகவல் உரித்துரிமைச் சட்டத்தை இந்திய பாராளுமன்றம் நிறைவேற்றியது.

குறைந்த ஊதியம் கோரிக்கையை மக்கள் ஆரம்பித்தபோது ராஜஸ்தான் வதிகளில் 1990 இல் இந்திய நிர்வாக சேவை (IAS) அதிகாரியான திருமதி. அருணாரோய் தலைமையில் உரித்துரிமைக்கான மக்கள் எழுச்சி எவ்வாறு ஆரம்பித்தது என்பது பற்றி திரு.கெஜ்ரிவால் விபரித்தார். சட்டப்படி ஒரு நாளைக்கு ஆகக் குறைந்த ஊதியமாக ரூ 22 வழங்கப்பட வேண்டியிருந்தாலும் விவசாயிகளுக்கும் குடியானவர்களுக்கும் ஒரு நாளைக்கு பதினொரு ரூபா மாத்திரமே வழங்கப்பட்டது. அவர்கள் பதினொரு ரூபாவிற்கு மாத்திரமே உரித்துடையவர்கள் என அதிகாரிகள் வற்புறுத்தியபோது சம்பளப்பட்டியலைப் பார்க்க வேண்டுமென மக்கள் கோரினர். சம்பளப்பட்டியல் ஓர் இரகசிய ஆவணம் என மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. சம்பளப்பட்டியலைப் பரிசீலிப்பதற்கான கோரிக்கைப் போராட்டத்தில் பல நிறுவனங்களும் சேர்ந்ததனால் அது பூரண பிரச்சார நடவடிக்கையாக உருப்பெற்றது. இறுதியில் 2005 ம் ஆண்டில் இந்திய அரசாங்கம் உரித்துரிமைச் சட்டத்தை அங்கீகரித்தது. உலகில் உரித்துரிமைச்சட்டம் அமுலில் உள்ள 70க்கு மேற்பட்ட நாடுகள் உள்ளன. இந்தியா உரித்துரிமைச் சட்டம் உள்ள சிறந்த நாடுகளுள் ஒன்றாகும்.

இச்சட்டம் மக்களுக்கு ஐந்து உரிமைகளை வழங்கக்கின்றன.

1) அரசாங்க திணைக்கள அதிகாரி இடமிருந்து தகவல்களைப் பெறல்.
2) எந்தவொரு அரசாங்க ஆவணத்தையும் பரீட்சித்தல்
3) எந்தவொரு அரசாங்க ஆவணங்களினதும் நிழல் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளல்
4) எந்தவொரு அரச வேலைகளையும் பரீட்சித்தல்.
5) அரச வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட பொருட்களின் மாதிரிகளைப் பெறல்.

பத்து ரூபா செலுத்தி விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்வதன் மூலம் எவரும் தகவல்களைக் கோரலாம். தகவல் 30 நாட்களுக்குள் வழங்கப்படாவிட்டால் தாமதமாகும் ஒவ்வொரு நாளும் தலா ரூபா 250 வீதம் அதிகாரியின் சம்பளத்திலிருந்து குறைக்கப்படும்.

இது தண்டனைப்பிரமாணம் ஆகும். அத்தோடு பிழையான தகவல், முடிவுறாத தகவல் அல்லது தவறான தகவல்களை வழங்கினால் ரூபா 25,000 அதிகாரி மீது அபராதம் விதிக்கப்படும்.

ட்.இ.ஆர்.ல விற்கு எதிராக குரோத எண்ணம் கொண்ட பிரசாரம்

2010 பெப்ரவரி 20 முதல் ட்.இ.ஆர்.ல வின் நடவடிக்கைகள் மற்றும் நிதி நேர்மைத்திறன் பற்றி சில ஊடகங்களில் குரோத எண்ணத்துடன் தவறான கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. ட்.இ.ஆர்.ல இணையத்தளத்தில் தரப்பட்டுள்ள தரவுகளுக் தகவல்களும் (www.tisrilanka.org) தவறாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

குரோத எண்ணம் கொண்ட இப்பிரசாரத்தின் நோக்கம் ட்.இ.ஆர்.ல நிறுவனம் நேர்மைத் திறனுக்கு அர்ப்பணமாய் சுயாதீன அமைப்பாக இயங்குவதனை அகைரிர்ப்படுத்துவதேயாகும். ஊழலுக்கு எதிரான சர்வதேசக் கூட்டமைப்பின் இலங்கைப் பிரவை என்ற வகையில் "நேர்மைத்திறன் கொண்ட ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புதல்" என்பதை நோக்கச் பல துறை சார்ந்த, யூகோள ரீதியில் மாறுபட்ட பல முனை களைக் கொண்ட பல நடவடிக்கைக ளை அமுல்படுத்துவதில் வெளிப்படைத் தன்மை மற்றும் வகை கூறல் ஆகியவற்றின் உயரிய தரத்தைக் ட்.இ.ஆர்.ல தொடர்ச்சியாகப் பேணிவருகின்றது.

தனது பொறுப்பு கடிதமான ஒன்று என்பது பற்றி ட்.இ.ஆர்.ல முழுமையாகக் தெரிந்து வைத்துள்ளது. நாம் முதல் கொடுக்க வேண்டிய பல அச்சுறுத்தல்கள் உள்ளன. எனினும் சகல சவால்களுக்கும் மத்தியிலும் நாம் வாக்களித்துள்ள பொறுப்புக்களை தொடர்ந்தும் நிறைவேற்றுவோம்.

சுயாதீனமாக, சுயமாக நிதி திரட்டும் ட்.இ.ஆர்.ல நிறுவனம் தனது உபாய மார்க்க வழிகாட்டல்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை சுயமாக அபிவிருத்தி செய்கின்றது. இந் நிகழ்ச்சிகள் கட்சி சார்பியற்றி, அரசியல் சார்பில்லாத வகையில் அமுல்படுத்தப்படுகின்றன.

தகவல் உரித்துரிமைக்குள்ள தனது வாக்குறுதியைத் தெளிவாக வெளிக்காட்டியுள்ள ட்.இ.ஆர்.ல, அதன் ஆரம்பம் முதல் கிடைக்கப் பெற்றுள்ள சகல நிதிகள், நிதி மூலங்கள் வருடாந்த கணக்கு மற்றும் இந் நிதியினைப் பயன்படுத்தி அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றிய பூரண விவரணம் மக்கள் முன் வைக்கப்பட்டுள்ளது.

ட்.இ.ஆர்.ல வின் நடப்பு மற்றும் நிறுவன உத்தேசங்கள் பற்றி வேண்டுமென்றே மேற்கொள்ளப்படுகின்ற தவறான கருத்துக்களினால் ஏமாற வேண்டாமென பொது மக்களை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டெநெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் வேண்டிக் கொள்கின்றது.

உரித்துரிமைச்சட்டம் எவ்வாறு RTI செயற்படுகின்றது

உரித்துரிமைச்சட்டம் சாதாரண தனிநபர் ஒருவருக்கு வழங்கியுள்ள அதிகாரங்கள் பற்றிய ஒரு சில உதாரணங்கள்.

11 மணிக்கு வந்து இரண்டு மணிக்குத் திரும்பிச் செல்லும் ஓர் ஆசிரியர் (அவர் முப.10.மணி முதல் பி.ப.4 மணி வரை கற்பிக்க வேண்டி இருப்பினும்) பற்றி வெறுப்படைந்த ஒரு சிறுவனின் சகோதரி ஆசிரியரின் வேலையைப் பரீட்சிக்க வேண்டுமென RTI விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தார். அவருக்கென ஒரு தினம் ஒதுக்கப்பட்டு காலை 11 மணிக்கு வருவாரு வேண்டப்பட்டார். எனினும் அவர் 4 மணிக்கு சிறிது முன் வருவதாக வற்புறுத்தினார். அவர் அங்கு சென்ற போது தலைமை ஆசிரியர் அவரை சகல வகுப்புகளுக்கும் கூட்டிச்சென்றார். சகல ஆசிரியர்களும் குறைந்தபட்சம் குறிப்பிட்ட அந்நாளிலாவது வந்திருப்பது கண்டு அவர் வியப்படைந்தார்.

தான் தினந்தோறும் உபயோகிக்கும் பாதை திருத்தப்படுவதை உதயா என்பவர் கண்டார். எனினும் பத்து நாட்களுள் மேல்பகுதி கழன்று வருவதனை அவர் அவதானித்தார். மூன்று கேள்விகளைக் கேட்டு அவர் RTI விண்ணப்பம் ஒன்றைத் தொடுத்தார். 1. இந்தப் பாதை நிர்மாணம் சம்பந்தப்பட்ட சகல கோவைகளையும் தான் வந்து பரீட்சிக்க வேண்டும். 2. இந்தப் பாதையை நான் வந்து பரீட்சிக்கவேண்டும். 3. பாதை நிர்மாணிக்கப்பட உபயோகிக்கப்பட்ட பொருட்களின் மாதிரி ஒன்றைப்பெற வேண்டும். அவருக்கு திகதியும் நேரமும் வழங்கப்பட்டது. குறித்த திகதிக்கு இரண்டு நாட்களுக்கு முன் அந்தப் பாதை மீண்டும் திருத்தியமைக்கப்பட்டிருந்தது. அவர் பரீட்சிப்பதற்காக சென்றபோது ஏன் நீங்கள் இப்போது கோவைகளைப் பரீட்சிக்க வேண்டும். பாதை இப்போது செய்யப்பட்டுள்ளது என்றார் பொறியிலாளர். மேலும் ஏதுமிருந்தால் நாங்கள் அவற்றைப் பழுது பார்ப்போம்" என அவரிடம் கூறினார்.

நீர்வழங்கல் திட்டத்தை தனியார்மயப்படுத்த டில்லி அரசாங்கத்திற்கு தேவை ஏற்பட்டது. அது உலக வங்கி உதவி வழங்கப்பட்ட திட்டமாகும். இதனைக் கேள்விப்பட்ட வதிவிடர் ஒருவர் அத்திட்டம் பற்றிய சகல ஆவணங்களையும் கேட்டு RTI விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தார். சம்பந்தப்பட்ட துறையில் உள்ள பல நிபுணர்களால் ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்டதோடு அது முற்றாக பேராபத்தானது எனக் கண்டு பிடிக்க